In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

E.A.No.3/2022 in E.P.No.14/2012 in O.S.No.26/2004

Deposition of the **P.**W.3 witness for

| | |
|---|---|
| Name | : மணிகண்டன் |
| Father's Name | : |
| District | : |
| Taluk | : |
| Village | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.04.2024 |

Solemnly affirmed by Thiru/Tmt. Bench Clerk Grade-III, Principal District Munsif Court, Padmanabhapuram in accordance with the Provision of Act XLIV of 1893.

முதல் விசாரணை

1. நான் நாகர்கோவிலில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு திங்கள்சந்தையில் குடியிருந்து வந்தேன். அப்போது ஸ்ரீராம் மர அறுவை ஆலையில் பணிபுரிந்து வந்தேன். 07.07.2010 அன்று ஆலைக்குரிய மின்சாரத்தை துண்டித்தார்கள். அப்போது எனது முதலாளி உச்சநீதிமன்றத்தில் தடை உத்தரவு இருப்பதாக கூறினார். மறுநாள் காலை 8 மணியளவில் நான் ஆலைக்கு வேலைக்கு வந்தபோது அங்கு திருவட்டார் காவல்நிலைய உதவி ஆய்வாளர், 2 போலீசார் மற்றும் செல்வராஜ் மற்றும் அவருடைய உறவினர்களும் ஜேசிபியுடன் வந்து ஆலையின் கேட்டை இடித்து தள்ளி விட்டு உள்ளே சென்று ஆலைலை

முழுவதுமாக இடித்து விட்டு அங்கிருந்த இயந்திரங்கள் மற்றும் மரங்களை டெம்போவில் வைத்து எடுத்து சென்று விட்டார்கள். மேற்படி தடை உத்தரவு பற்றி ஆணையரிடம் எங்களிடமும் எனது முதலாளி கூறினார். அதன் பிறகு முதலாளி அவர் வழக்கறிஞரை பார்க்க தக்கலைக்கு வந்து விட்டார்.

2. காலையில் செல்வராஜ்க்கும் எங்கள் முதலாளிக்கு வார்த்தை தர்க்கம் நடைபெற்றது. மேற்படியார்களால் எடுத்து சென்ற இயந்திரங்களின் அன்றைய தேதிய மதிப்பு சுமார் 25 லட்சம் முதல் 30 லட்சம் வரை இருக்கும். மேற்படியார்களால் எடுத்துச்செல்லப்பட்ட வெளியாட்களின் மரங்களின் மதிப்பு ரூபாய்.20 லட்சமும் முதலாளிக்கு உரிமைப்பட்ட மரங்களின் மதிப்பு ரூபாய் 20 லட்சத்திற்கு மேல் இருக்கும். மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். என்னுடன் அப்போது யார் யார் வேலை பார்த்தார்கள் என்றால் நானும், ஜாண்சனும் என்பவரும் இருந்தார். அவரும் மேற்படி சம்பவத்தை பார்த்தார். நாங்கள் தகவல் கொடுத்தவுடன் முதலாளி உடனே வந்து பார்த்தார்.

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.